
# திருமூலர் சிந்தனைகள்



சிந்தனையாளர்

திருமந்திரம் சி. இராமநாதன்

அவர்களது எண்பத்தி ஏழாவது அகவை நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE LIGHT IS WITHIN

You must have read about Prince Siddartha, who later came to be known as Buddha, the Enlightened One! Born into a princely family, Siddhartha was deeply affected when he saw a sick man, an old person and a dead body. He left his palace, his young wife and one year old son, to live the live of a mendicant and find out the way to Nirvana. After undergoing many fasts and penance he realised that the only way to alleviate one's misery is to follow the eight - fold path of righteousness. From the day of this realisation, he came to be known as Goutam Buddha. He laid great stress on truth and nonviolence.

The Enlightened One lay on his death bed. He was being looked after by his ardent disciple, Anand. Bhadrak, another devotee came to see the master. He could not help weeping loudly at the thought that Goutam would be passing into eternity soon. Buddha heard his sobs and enquired from Anand, "Who is weeping"

"Tathagat, Bhadrak is here to see you" said Anand.

"Then, call him, "replied the compassionate Buddha.

Bhadrak fell at his feet and burst into loud sobs. Buddha asked him the reason for his sorrow. 'O Master, who shall now show us the light when you are gone. That is why I weep, Bhadrak replied in a voice chocked with emotion.

Buddha lovingly placed his hand on Bhadrak's head and said, Bhadrak, *The light that you seek is within you. Do not search for it anywhere. Only the ignorant seek it in the temples, holy places, caves and forests and thus wander aimlessly. In the end, they get only disappointment. On the contrary, those whose thoughts, speech and deeds are pure and in harmony with each other, find the light within their own self."*

*" Be your own light", should be the guiding motto.*

*This was the last message of Goutam Buddha an he had devoted his entire life to his preaching.*

*(Reproduced from a collection of articles maintained by Mr. S Ramanathan.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் சிந்தனைகள்

ஈழத் திருநாட்டில் திருமந்திரத்தின்
மெய்ப்பொருள் அறிந்து தெளிந்து அவ்வழியில்
தமது வாழ்வை மேற்கொண்டு வாழ்ந்துவரும்
முதுகுரவர் அருட்திரு. சி. இராமநாதன் அவர்களது
எண்பத்தி ஏழாவது அகவை நினைவு கூர்ந்து
அவரது நீண்டஆயுளுக்கு நல்வாழ்த்துக் கூறுவதோடு
திருமூலரது சிந்தனைகள் சிலவற்றை
தொகுத்து இச் சிறுமலராக
வெளியிடுகிறோம்.

மெய்ப் பொருள் ஆய்வுசெய்யும் ஆர்வலர்க்கு
இது பயன் தரும் என நம்புகிறோம்.

வெளியீடு
திருமூலர் சங்கம்
3, ரிச்வே பிளேஸ்
கொழும்பு - 04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை எனக்கு அறிவித்தான்

எமது ஈழத்திரு நாட்டில் உதித்த திரிகாலமுணர்ந்த தத்துவ ஞானிகளுள் யோகசுவாமிகள் ஒருவர். அவர் தமிழ் மக்களின் ஆத்மீக உயர்வுக்கும், ஈடேற்றத்திற்கும் அருளிச்செய்த அற்புதமான "நற்சிந்தனை" என்னும் நூலின் ஆரம்ப வாக்கியமாக "என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்" என்று கூறுகின்றார். இதுவே "ஆத்மஞானம்", "குருதீட்சை" என்று சொல்லப்படுபவை.

எமக்குள் இயங்கும் மெய்ப்பொருளாகிய ஆத்மாவின் சொரூபத்தை எமக்குக் காட்டி, அது ஓமெனும் அகாரம், உகாரம், மகாரமாகிய முப்பதத்தில் இயங்கும் வழியையும், அதன் பர்ணமிப்பு, பிரதிபலிப்பு முதலியவைகளையும் அறிவித்து, மெய் ஞானத்தை உபதேசிப்பவனையே சத் + குரு = சற்குரு என்பர். மெய்ப் பொருளான "சத்தைப் பற்றிய அறிவை "சித்" என்றும் அதை உணர்த்தல் சத் + சித் + ஆனந்தம் = சச்சிதானந்தம் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு சற்குரு அளிக்கும் ஆத்ம ஞானத்தை திருமூலர்,

தாள் தந்து அளிக்கும் தலைவனே சற்குரு
தாள் தந்து தன்னை அறியத்தர வல்லோன்
தாள் தந்து தத்துவ ஆதீதத்துச் சார்சீவன்
தாள் தந்து பாசம் தணிக்குமவன் சத்தே. என்றும்,

எமக்குள் இயங்கும் ஆத்மாவாகிய பிரணவப் பொருளை குரு மூலம் அறிவதால் பெறும் பேறுகளை,

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமற் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சித்து தானிருந்தானே. என்றும்

தமது திருமந்திரத்தில் கூறியிருக்கின்றார்.

சி. இராமநாதன்

திருமூலர் சங்கம்.
கொழும்பு – 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. சி. இராமநாதன் ஐயா அவர்களின் 87வது பிறந்ததின வாழ்த்து

திருமந்திரமே பேச்சும் மூச்சுமாயிருக்கிற எங்கள் திருமூலர் சங்கத்தின் போஷகர் உயர்திரு சி. இராமநாதன் ஐயா அவர்களின் எண்பத்தேழாவது பிறந்ததினம் வருகிற மார்கழி மாதம் இரண்டாம் திகதி கொண்டாடப்பட இருக்கின்றது.

ஐயா அவர்கள் திருமந்திரக் கருத்துக்களைப் பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து பல்வேறு தலைப்புகளில் பல்வேறு நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி உள்ளார்கள். அவற்றுள் சிலவே அச்சிடப்பட்டுள்ளன. பல அச்சிடப்பட உள்ளன.

சொல்லொணாத் துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் எமக்குத் திருமந்திரத் தியானமுறை ஆறுதல் தருவதைப் பல அன்பர்கள் அனுபவித்து வருகின்றனர். பிரதி சனி வாரந் தோறும் மாலை ஐந்தரை மணிக்கு இலக்கம் 3, றிஜ்வே பிளேஸ், கொழும்பு 4ல் திருமந்திர விளக்கமும் தியானமும் தொடர்ச்சியாகப் பல வருடங்களாக நடந்து வருவதற்கு ஐயா அவர்களின் ஆசியும் ஊக்குவிப்பும் உற்சாகமுமே காரணமாகும்.

எங்கும் நிறைந்த பரம் பொருளை எங்கே தேடுவது என்ற வினாவிற்கு திருமந்திரம் விடைதருகிறது. அந்தத் திருமந்திரத்தைத் தேடிக் களைத்தபோது, ஐயா அவர்கள் அதைத் தேடி அனுப்பி வைத்தார்கள். அத்திருமந்திரம் பின்வருமாறு:

மாடத்து ளானலன் மண்டபத் துள்ளானலன்
கூடத்து ளானலன் கோயிலி லுள்ளானலன்
வேடத்து ளானலன் வேட்கை விட்டார் நெஞ்சில்
மூடத்து ளேநின்று முத்தி தந்தானே.

இந்த எண்பத்தேழு வயது இளைஞன் இடைவிடாது படித்துக் கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பதைப் பார்த்து நாம் ஆச்சரியப் படாமல் இருக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரம் முதுமையை போக்குகிறது. காலனை உதைக்க வைக்கிறது.

ஏற்றிஇறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே.

இதை நான் அனுபவத்தில் கண்டுள்ளேன். அனைவரும் இதை அனுபவமாக்க முடியும் என்பது எனது முடிவான முடிவாகும்.

ஐயா இன்னும் பல்லாண்டேனும் பதங்கடந்து வாழப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திருமதி. செல்வம் கலியாணசுந்தரம்
தலைவர் - திருமூலர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் வரலாறு

தமிழ்மொழியை சிவமொழி என்றும் சொல்லுவார்கள்.

மனித உயிர்ப்புக்கு காரணமான சூரியகலை - சந்திரகலை இரண்டையும் நுணுகி ஆய்ந்து, சூரியகலை 12 மாத்திரை என்றும் சந்திரகலை 18 மாத்திரை என்றும் தெளிந்தனர் நம் மூதாதையர்.

இக்கணித அளவை நெடுங்கணக்கென்றனர். சூரியகலையின் மாத்திரை 12ஐயும் 12 உயிர் எழுத்துகளாகவும், சந்திரகலையின் மாத்திரை 18 ஐயும் மெய்யெழுத்துகளாகவும் வகுத்து இவை இரண்டும் கூடும் இடமாகிய திரிபுடையை, ∴ ஆயுத எழுத்தாக வகுத்தனர்.

சூரிய சந்திர கலைகள் இணையும் இடத்திலே, மனமும் ஒடுங்கும். அதுவே தியானம். அந்நிலையில் அங்கு சுரந்து வழியும் அமிழ்தம், இறந்தவரை உயிர்ப்பிக்கவும், சந்ததமும் இளமையோடிருக்கவும் செய்யும் ஆற்றல் உள்ளது.

நம் மூதாதையர் தாம் வகுத்த மொழிக்கு அமிழ்தம் எனப்பெயரிட்டனர். அமிழ்தம் எனும் சொல் நாளடைவில் திரிந்து தமிழ்தம் - தமிழம் - தமிழ் என்றாகியது.

அமுத மொழியை விநாயகரிடம் வேண்டிப் பெற்ற ஔவை நீண்ட நாள் உயிர் வாழ்ந்தாள் என்பது வரலாறு.

சீவனே சிவனாகித் தோன்றியதால் தமிழ் சிவமொழி எனப்பட்டது.

அது தெய்வீகத்தை உணர்த்துவதால் தெய்வமொழி எனவும் பெயர் பெற்றது.

இவ்வடிப்படையிலேயே ஆதிசிவன் பெற்ற தமிழ் என்ற வழக்காறு ஏற்பட்டது.

இத்தெய்வத் தமிழ், முருகனும் அகத்தியனும் மற்றும் புலவர் பலரும் வளர்க்க வளர்ந்தது தென் தமிழ் நாட்டிலாகும்.

இன்று எமக்குக் கிடைத்துள்ள மிகத் தொன்மையான நூல் தொல்காப்பியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்."

நல்வினை தீவினை என்பவற்றின் நீங்கி பூரண அறிவினனான பற்று அற்ற பரமனால் வகுக்கப்பட்ட அற நூலே முதல் நூல் என்று தொல்காப்பியம் கூறும்.

தொல்காப்பியம் தமிழருடைய செம்மையான வாழ்க்கை நெறியை விளக்கும் முன்னூல். இந்நூல் நம்முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை நெறியின் உயர்விற்கு வித்தான மெய்மைப் பொருள்கள் மூன்று என்னும் உண்மை விளக்குகிறது.

இந்த மூன்று மெய்ப் பொருள்களின் உண்மையை நெறி முறை மரபு தவறாது, எமக்கு தொகுத்துத் தந்தவர்கள் மூவர்.

திருமூலர் திருமந்திரத்தையும், ஔவையார் ஞானக் குறளை யும், திருவள்ளுவர் திருக்குறளையும், படைத்துத் தந்தனர். இம் மூன்றுமே தமிழருடைய தொன்மைமிகு இயற்கை நெறியாம், மெய்ப் பொருள் நெறியை இன்றும் விளக்கி நிற்பவை.

இவற்றுள் திருமந்திரம் தொன்மையான மறை நூல். இது 3000 பாடல்களைக் கொண்டது.

தமிழருக்கும் ஏன், முழு மனித குலத்துக்குமே சிறப்பாக அமைந்த மறை நூல் இத் திருமந்திரம்.

ஆதலால் இத் திருமந்திரத்தை ஆக்கியருளிய திருமூலரே கலியுகத்தின் முதற் குருவாக (ஞானகுரவர்) அமைவார்.

திருமந்திரத்தை இறைவன் அருள, அதனை எமக்குத் தொகுத்து வேதஆகமமாக ஆக்கித்தந்த திருமூலருடைய வரலாற்றை காண்போம்.

திருக்கைலாயத்தில் வாழ்ந்த சிவநாத சித்தர் நந்திதேவர். சிவயோகர், சுந்தரநாதர், பதஞ்சலியார், வியாக்கிரபாதர் என்னும் நால்வர் அவரது மாணவர்கள். இவர்கள் நந்திதேவர் அருளால் மெய்ப்பொருள் உண்மைகளை ஐயமறக் கற்றுத் தெளிந்து சிவானுபவ இன்பம் துய்த்தவர்கள்.

இவர்களுள் சுந்தரநாதர், அகத்திய மாமுனியைத் தரிசிக்க உளங்கொண்டு கைலையை விட்டு பொதிகைக்குப் புறப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் காவிரிக் கரையில் அமைந்திருந்த சாத்தனூர் என்ற பதியில் சில நாள் தங்கி ஓய்வெடுத்தார்.

சாத்தனூர், கைத்தறி வினைஞராகிய கைக்கோளர் வாழும் சிற்றூர். இக் கைக்கோளர் குடியில் பிறந்த மூலன் என்றொரு பையன் இருந்தான்.

சடைச்சாமி என்னும் சித்தர் அவ்வூரில் பித்தனைப் போலத் திரிந்தார். மூலனுக்கு அவனது குலத்தொழிலில் நாட்டம் செல்ல வில்லை. அவனது நாட்டம் இந்த சித்தரிடமே சென்றது. மூலன் அவரோடு சுற்றித் திரிந்தான்.

ஒரு நாள் சடைச் சாமியார் அவனுடைய பக்குவாபக்குவம் அறிந்து, தெருவோரம் ஓடிய நாயைக் காட்டி " இதோ பார், இந்த நாயில் இருக்கின்ற ஆத்மாவே உன்னிடத்திலும் இருக்கிறது. சகல உயிர் களிலும் கலந்து நிற்பதும் அந்த ஒரு பொருளே", என்ற ஏகத்துவ தத்துவத்தை உபதேசித்தார்.

பிறிதொரு நாள் காவிரிக் கரையில் மூலனைக் கண்டபோது "இந்த நதியில் ஓடும் மீனிலும், காற்றில் ஆடி அசையும் செடி கொடிகளிலும் உள்ள சீவனே உன்னிடமும் இருக்கிறது" என்றார்.

"சகல சீவராசிகளும் எமது உடன் பிறப்புகள்."

"அனைத்து உயிரையும் நாம் ஒரேதன்மையாக நேசிக்க வேண்டும். உயிர்களிடத்தில் பேதா பேதம் காணுவதற்கு மனதில் இடம் கொடுக்கக் கூடாது" என்பார்.

சடைச் சாமியின் உறவால், மூலனின் மனம் அன்புருவாக மாறிவிட்டது. அவன் உள்ளத்தில் கருணை வெள்ளம் கடல் மடை திறந்தது போல ஊற்றெடுத்துப் பிரவாகித்தது.

திடீரென ஒரு நாள் சடைச்சாமி சாத்தனூரை விட்டு மறைந்து விட்டார். அவரை எங்கு தேடியும் காணவில்லை.

மூலன் தாயை பிரிந்த கன்றென, பித்துப் பிடித்து வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான். அது கண்டு அவனது பெற்றோர் வருந்தினர்.

அவன் தாயார் அவனது போக்கை மாற்ற, "மூலா இப்படி முடங்கிக் கிடப்பதை விட்டு எங்கள் பசுக்களை காவிரிக் கரைக்கு ஓட்டிச் சென்று மேய.த்துவா, புண்ணியமாய் போகும்" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையே வடிவாக வாழ்ந்த மூலனுக்கு, சக உயிர்கள் இடத்து அன்பு செய்யும் அத்தொழில் உடன்பாடாக இருந்தது. அவன் பசுக்களை மேய்க்கத் தொடங்கினான்.

அவனது அன்பின் அரவணைப்பில் பசுக்கள் கொழுகொழு என வளர்ந்தன. குடம் குடமாக பாலைச் சொரிந்தன. ஊரார் மூலனை நல்ல மேய்ப்பனாகக் கண்டனர்.

தமது பசுக்களையும் மேய்த்து வரும்படி ஊரார் கேட்டனர். மூலனும் ஒப்புக்கொண்டான். காலங்கள் ஓடின.

அவனது அன்பில் கட்டுண்ட பசுக்கள் அவன் சொற்படி நடந்தன. அவன் அவற்றை கருணையுடன் ஆட்சி செய்தான்.

பெற்றோர் அவனது பருவம் அறிந்து அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

அவனது மனையாள் அவனிடத்து மிகவும் பிரியமாக நடந்து வந்தாள். பசுக்கள் அவனை தம் உயிரினும் மேலாக நேசித்தன. அவ்வூர் செல்வங் கொளிக்கும் பூமியாக விளங்கிற்று.

மூலனும் கவலையின்றி அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தான். இந்த மகிழ்ச்சியான வாழ்வு நீடிக்கவில்லை. பிறவி எடுத்ததன் பயனை நிறைவேற்ற வேண்டிய காலம் நெருங்கியது.

ஒரு நாள் காவிரிக் கரையில் பசுக்களை மேயவிட்டு விட்டு ஒரு மரத்தடியில் படுத்து கண் அயர்ந்தான் மூலன். கண் அயர்ந்த அவன் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

தமது மேய்ப்பனின் உயிர் பிரிந்தது கண்டு பசுக்கள் அவனைச் சூழ்ந்து நின்று கதறின. சில பசுக்கள் துயர் தாங்காது மயங்கி வீழ்ந்தன. பசுக்களின் கதறல் காவிரிக் கரையெங்கும் சொல்லொணாத சோக கீதமாய் ஒலித்தது.

பொதிகைக்கு போகும் வழியில் அவ்வூரில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த சுந்தரநாதருக்கு பசுக்களின் அவலக் குரல் கேட்டது. குரல் வந்த திக்கை நோக்கிச் சென்றார்.

அங்கு அவர் கண்ட காட்சி அவர் உள்ளத்தை உருக்கியது. வியந்து போனார். இப்படியும் ஒரு அன்பு உருவமா? பசுக்களின் வேதனையில் மூலனின் அன்பின் முதிர்ச்சியை உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது உள்ளத்தில் ஒரு நெருடல். பல்லாயிரம் ஆண்டு தவம் செய்து இளைத்து முதுமையடைந்த தமது உடலை ஒரு முறை பார்த்தார். வாலிபனான மூலன் உடலையும் பார்த்தார்.

அடுத்த கணம் தமது உடலை ஒரு புதரிடைக் களைந்து விட்டு, தாம் கற்றுக்கொண்ட அட்டசித்திகளுள் ஒன்றான பரகாயப் பிரவேசம் என்னும் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை மூலம் மூலன் உடலில் பிரவேசித்தார்.

மூலனின் உடல் உயிர்த்தது. அவன் தூக்கம் கலைந்து எழுபவன்போல் எழுந்தான். பசுக்கள் ஆனந்த பரவசமாகி அவனை அன்புடன் நக்கியும் உரசியும் தமது மகிழ்ச்சியை தெரிவித்தன.

மூலனாக மாறிவிட்ட சுந்தரநாதர் அவற்றின் அன்பில் நெகிழ்ந்து மூலனாகவே மாறிவிட்டார்.

பொழுது சாய பசுக்கள் தாமாகவே ஊர் நோக்கி நடக்க லாயின. மூலன் அவற்றைத் தொடர்ந்து சென்றார். அவை வழமை போல தத்தம் மனைகளைச் சென்றடைந்தன.

மூலன் தனித்து நின்றார். எங்கு போவது? பாதையில் தனித்து நின்ற மூலனை அவனது மனைவி கண்டு ஆச்சரியத்துடன் அணுகி "சுவாமி ஏன் இங்கேயே நின்று விட்டீர்கள் வாருங்கள் எம் அகத்திற்கு போகலாம்" என அவர் கைபற்றி அழைத்தாள்.

திருமூலர் மருண்டு விலகித் தம் நிலையை எடுத்துரைத்தார். அவர் கூற்றை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஊரார் கூடி நிலைமையை ஆராய்ந்தனர். மூலனிடம் காணப் பட்ட அதீதமான அருட் பிரகாசத்தைக் கண்டு அவர் கூற்றை உண்மை என நம்பினார்கள்.

தமது உண்மை நிலையை அவர்களுக்கு உணர்த்தி அவர்க ளிடம் விடைபெற்றுக் கொண்டு திருவாவடுதுறை அடைந்தார். அங்கு சிவதரிசனம் செய்து, கோவிலின் மேற்றிசையில் ஓங்கி வளர்ந்து நின்ற அரசமரத்தடியில் நிட்டைகூடித் தவம்செய்யலானார்.

கருணை வடிவான மூலனின் உடலில் தங்கிச் சமாதி கூடிய காரணத்தால், அவ்வுடலின் பண்பிற்கு ஏற்ப, தான் சமாதி நிலையில் பெற்ற இன்ப அனுபவங்களை உலகத்தார் யாவரும் பெறச் செய்ய வேண்டும் என்ற பெருங் கருணை மேலிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. - 85

தான் பெற்ற இன்பத்தை, உலகத்தார் அனைவரும் பெற வேண்டும்.

விண்ணெலாம் வியாபகமாய் நிற்கும் மெய்ப்பொருளே தன் மெய் உடலில் மறை பொருளாக, ஓங்கார நாத ரூபமாக விளங்குகிறது.

அந்த மெய்ப்பொருளை நம்மெய்யில் உணர்ந்து பற்றப் பற்ற சிவபதம் தானே வந்து கைகூடும் என்றார்.

நந்தி திருவடி நான்தலை மேற்கொண்டு
புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தைசெய்து ஆகமஞ் செப்பலுற் றேனே. - 73

குருவாக வந்த சிவமாகிய நந்தி தேவனுடைய திருவடியை பற்றி எனது சிதாகாயமாகிய சிரசில் சூடி, அம் மெய்ப்பொருளை அறிவால் அறிந்து, நாள்தோறும் அந்தியாகிய திரிபுடையில் அறிவை நிறுத்தி போற்றி செய்து தியானித்து திருமந்திரம் ஆகிய சிவாகமத்தை எமக்கு சொல்லி அருளினார்.

3000 பாடல்கள் கொண்ட இந்த அனுபூதி ஆகமத்தை, எங்களுக்கு அருளி விட்டுத் தில்லையம் பதி சேர்ந்து அங்கு தில்லைக் கூத்தனின் திருவடிகளில் ஐக்கியமாகி நிர்விகற்ப சமாதி கொண்டருளினார்.

ஆதிகாலத்தில் தில்லையில் திருமூலர்
அழகர் மலையில் ராமதேவர்
அனந்தசனத்தில் கும்பமுனியும்
நல்ல அருணையில் இடைக்காடரும்
ளாதவைத்தீஸ்வரன் கோவிலில் தனவந்திரி
வான்மீகர் எட்டுக்குடி
ப.ாதசெங்களனி ஆரூரிலே கமலமுனி
பழனியில் போகநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பரங்குன்றினில் மச்சமுனியும்
தெய்வத் திருப்பதியில் கொங்கணவரும்
சேதுராமேஸ்வரம் தன்னிலே பதஞ்சலியும்
சேர் காசி நந்திதேவர்
சோதிரங்கத்திலே சட்டமுனி
மதுரையில் சுந்தரானந்த மூர்த்தி
திருவிட மருதூரில் பத்ரகிரியும்
திருவொற்றியூர் பட்டினத்தாரும்
குற்றாலம் தன்னிலே அகத்தியரும்
ஆவுடையார் கோயிலில் மாணிக்கரும்
அருந்தபசு புரிந்து என்றும்
அழியாத புகழ் எய்தி
ஒளிகண்ட திவ்ய ஸ்தலமாம்.

என்ற இப் பாடல் இதனை உறுதி செய்கிறது.

தம் சித்தத்தை சிவன்பால் வைத்து, சித்தமலம் அறுத்து, சிவமயமாய் பிரகாசிப்பவர்கள் சித்தர்கள். இவர்கள் காலனை வென்று மரணமற்ற பெருவாழ்வு வாழ்பவர்கள். வேண்டுங் காலம் புவியில் வாழ்ந்து, பிறவியின் நோக்கம் நிறை வேறியதும் தமது சுட்டு உருவாம் பூத உடலை, (நிர்விகர்ப்ப - மாற்றம் இல்லாத, சமாதி-ஆதியில் கர்ப்பத்தில் இருந்த நிலைக்கு, சமமாக-ஈடாக) ஆலயமாக்கி அதில் ஒளிவடிவில் கரந்து சிவசங்கம சாயுச்சிய நிலையை அடைந்து சிவமயமாகத் திகழ்பவர்கள்.

இத்தகைய சித்தர்கள் சமாதி கொண்டருளிய புண்ணிய ஸ்தலங்களே மேற் கூறிய சிறந்த புண்ணிய ஸ்தலங்களாகும். இச் சித்தர்கள் கண்ட நிறைவான நெறியே சித்தாந்தம். அதாவது சித்த + ஆந்தம் - சித்தத்தை வென்ற சித்தர்கள் கண்ட இறுதி நிலையே = சித்தாந்தம்)

சித்தாந்தமே மெய்ப்பொருள் காட்டும் சன்மார்க்கம். அதுவே சிவமார்க்கம்.

உழவன் பூமியைப் பண்படுத்தி பயிர்செய்யப் பக்குவப் படுத்துவது போல, ஆன்மாவைப் பண்படுத்தி, சிவப்பயிரை வளர்க் கத்தக்க நிலமாக பக்குவப்படுத்தும் வழிமுறைகளை கூறுவது ஆகமம். (ஆகமம் = ஆ - ஆன்மா + கமம் - உழுது பண்படுத்தல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரத்தை உலகிற்கு அருளிச் செய்யவே இறைவன் தன்னை உலகிற்கு வருவித்தான் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" (81) என்கிறார் திருமூலர்.

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே (84)

தனது உடலை வேதமாகவும் அதில் உயிர்த்த ஆன்மாவை ஆகமமாகவும் உணர்த்தி இறைவன் இந்த திருமந்திர நூலை ஆக்கிவித்தான் என்கிறார் திருமூலர்..

நான்மொழிபவை என் மொழியல்ல. இவை என் அறிவால் போந்தவையுமல்ல. இறைவன் அருளால் பயந்தவை. அவ்வாற்றலை சிவனே தனக்கு அளித்தான் என்கிறார்.

"பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின் வேர் அறியாமை விளம்புகின்றேனே" (95) என்பது அவர் வாக்கு.

பணிவுடன் நந்தி காட்டிய வழியில் வாழத் துணிபவருக்கே இந்த மெய்ப் பொருள் உணரப்பெறும்.

வைதிக, ஐதீக நெறி நின்று நோற்கும் முனிவர், தேவர், துறவிகளுக்கு இவ்வுரையால் பயனேதும் கிட்டாது. அவர்களால் உண்மையான மெய்ப் பொருளை உணரமுடியாது.

மெய்ப்பொருள் உண்மை குருவருளால் உணர்த்தப்படுவது.

திருமூலர் தான் அறிந்து தெளிந்த மெய்ப்பொருள் உண்மையை காலங்கர், கோரக்கர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர், மூலர் எனும் ஏழு மாணவர்களுக்குப் புகட்டினார். அவர்கள் எழுவரும் ஏழு மடாலயங்களை அமைத்து இவ்வாகம மெய்ப்பொருள் உண்மையை மக்களுக்குப் போதித்து வரலாயினர்.

இவ்வாறு வாழை அடி வாழை என வந்த திருக்கூட்டமே சித்தர் மரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் வாழ்ந்த சித்தர் மரபும் இத்தகையதே. இச்சித்தர் மரபில் வந்து, யாழ்ப்பாண மக்களால் நன்கு அறியப்பட்டவர் சிவயோக சுவாமிகள்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து கொழும்பில் வாழ்ந்து யாரும் அறியாமல் இலைமறை காயாக வாழ்ந்து மாதவம் இயற்றிய மற்றச் சித்தர் கார்த்திகேசு சுவாமிகள்.

இதே போல திருமந்திர உட்பொருளை நன்குணர்ந்து, இன்றும் தமது எண்பத்தி ஏழாவது வயதில், கொழும்பில் மெய்ப் பொருள் விளக்கம் தந்துகொண்டிருக்கிறார் திரு. சி. இராமநாதன் என்னும் அருளாளர்.

திரு. சி. இராமநாதன் இம் முதுமையிலும் பேச்சும் மூச்சும் திருமந்திரமாக அமைய திருமந்திர விளக்கம் அளிக்கும் பணியைச் செய்து வருகிறார்கள்.

ஐயம் அகற்ற விளையும் ஆர்வலர்கள் எவரும் அவரை அண்டித் தெளிவு பெறலாம்.

- அடியார்க்கடியன்

கொழும்பு அருளொளி நிலையம்
31/21. டோசன வீதி, கொழும்பு 2.

* * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரமே சிவாகமம்

திருமூலர் திருவாய் மலர்ந்தருளிய திருமந்திரமே சிவாகமம். இது திருமுறைகளில் பத்தாவதாக இணைக்கப்பட்டு உள்ளது. திருத்தொண்டர்களைப் பாடிய நம்பியாரூரர் "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று திருமூலரை "நம்பிரான்" என்று சிறப்பித்து கூறுகிறார்.

சிவபெருமான் என்று நான் அழைத்து ஏத்தத்
தவபெருமான் என்று தான் வந்து நின்றான் (2971)

சிவனே திருமூலரைத் தவபெருமான் என விழித்துக் காட்சி கொடுத்த பெற்றியினை திருமூலர் வாயாலேயே அறிய முடிகிறது.

உலகம் உய்ய, மெய்ப்பொருளை விளக்க, மூலனை ஒரு கருவியாகக் கொண்டு, அவனை உயர் தவத்தோனாக்கி, தன்னை அறிவித்து, தன்னை அடையும் மார்க்கத்தைச் "சிவாகமம்" ஆக ஆக்கித் தரச்செய்தவன் இறைவனே.

திருமந்திரம் ஒரு அநுபவ ஞானத் திருநூல். திருஞான சம்பந்தரை மிகவும் கவர்ந்த பெருநூல். செந்தமிழ் மணக்க எழுந்த மெய்ப்பொருள் நூல். ஆன்மாக்களை நல்வழிப்படுத்தி உயர்நிலை அடையச் செய்யும் யோக நூல். இந்நூலில் கூறப் பட்டுள்ள மெய்ப்பொருளை ஆய்ந்து உணர்ந்து பயின்றால் உறுதி யாக ஆன்மா சிவபோகத்தை அடைய முடியும்.

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. (64)

இறைவனால் அருளப்பட்ட இந்த சிவாகமத்தை எண்ணற்ற கோடி முறை ஓதினாலும், இறைவன் கூறிய அறிதற்கு உரிய அறிவாகிய மெய்ப்பொருளை அறியாது போனால், எத்தனை கோடி முறை ஓதினாலும் அவை யாவும் நீர்மேல் எழுத்துப் போல் பயனற்று போகும் என்கிறார் திருமூலர். மெய்ப்பொருள் உண்மை உணரப்படாத வரை திருவருள் சித்திக்காது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" (355) என்றும்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு" (423) என்றும்

திருவள்ளுவர் இந்தக் கருத்தை தமது திருக்குறளில் இருவேறு இடங்களில் வலியுறுத்துகிறார்.

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து
சொல்லுவார் செல்வர் சிவபுரத்தில்
உள்ளார் சிவனடிக் கீழ்"

என்று, மெய்ப்பொருளை உணர்ந்து கற்றால் அல்லாது சிவபுரத்தில் சேர்ந்து முத்தி நிலையான சிவநாதர்களோடு வாழ்வது முடியாது என்பதை மணிவாசகப் பெருமானும் சிவபுராணத்தில் தீர்க்கமாகக் கூறியுள்ளார்.

ஆதலால் நாம் திருமந்திரத்தைக் கற்கும் போது அது அருளப்பட்டதன் நோக்கத்தையும், அது கூறும் மெய்ப்பொருள் உண்மையையும் உணர்ந்து அல்லது மெய்ப்பொருள் கண்ட தவத்தோரிடமும் கேட்டு தெளிந்து கொள்ளுதல் அவசியம்.

தற்காலம் வழக்காற்றில் பிரபல்யமாகி போற்றப்படும் கிரந்த, தேவநாகிரி ஆகிய வடமொழிகளில் அமைந்துள்ள ஆகமங்கள் தமிழ் ஆகமத்திநின்றும், வடமொழி பயின்ற தமிழ்ப் புலவர் களால் வடமொழியில் மொழி பெயர்க்கப் பட்டவையாகும்.

இக்கருத்தை காமிகம் எனும் வடமொழி ஆகமமும், பவுஷ்கரம் எனும் உப ஆகமமும் ஆதாரப்படுத்துகின்றன.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்."

முதல் நூல்கள் இருவகைப்படும். ஒன்று வேதம். மற்றது ஆகமம். வேதம் மெய்ப்பொருளை விளக்குவது. ஆகமம் மெய்ப் பொருளை அடைந்து அனுபோகப்படும் மார்க்கத்தை கூறுவது.

இவை இரண்டுமே இறைவனால், தன்னை அறிந்து தன்மய மான தவத்தோர்களால் காலத்திற்குக் காலம் மக்களுக்காக வியாக்கியானஞ் செய்விக்கப்படுபவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் போற்றிப் பயிலும் வேதங்களும் ஆகமங்களும் துவாபரயுகத்தில் வேதவியாசரால் வியாக்கியானம் செய்யப்பட்டவை.

சதுர் யுகங்களிலும் மக்களின் மனஎழுச்சி, பண்பு, அறிவுத் திறன் முதலியவற்றின் அடிப்படையில் மெய்ப்பொருள் உண்மைகள் வியாக்கியானம் செய்யப்பட்டன.

கிருதாயுகத்தில் மாசற்றகொள்கை உடையவர்களாக மக்கள் வாழ்ந்ததால் அவர்களுக்காக வகுக்கப்பட்ட நெறி சரியை மார்க்கம்.

திரேதாயுகத்தில் மாசற்றகொள்கை உடைய மக்கள் மனத்தில் சற்று விதற்பபுத்தி ஏற்படத் தொடங்கியது. அதனால் அவர்களுக்காக வகுக்கப்பட்ட நெறி கிரியை மார்க்கம்.

துவாபர யுகத்தில் மக்கள் மனத்தில் விகாரபுத்தி புகுந்து பாதகசிந்தை வளரலாயிற்று. அதனால் அவர்களுக்காக வகுக்கப் பட்ட நெறி யோக மார்க்கம்.

இவ்வாறு காலத்திற்கு காலம் இறைவனால் வருவிக்கப்பட்ட தவத்தோரால் அருளப்பட்ட வேத ஆகமங்கள் இன்று காலத்திற்கு ஒவ்வாத பலவற்றைத் தன்னகத்தே கொண்டு பயிலப்படுவதால் அவற்றால் ஏற்படும் விளைவுகள் பொருந்தாது ஒழிகின்றன.

கலியுகத்திற்காக இறை வனால் அருளப்பட்ட நெறி ஞானமார்க்கம் ஆகும். கலியுகத்திற்கான இந்த ஞான மார்க்கத்தை வியாக்கியானஞ் செய்ய வந்த முதல்வர் திருமூலர்.

அவர் காலத்தே அவருடன் மெய்ப்பொருளை விளக்குவதற் காக வருவிக்கப்பட்ட மற்றும் இருவர் வள்ளுவரும், ஒளவையாரும் ஆவர். இவர்கள் மூவராலும் அருளப்பட்ட திருமந்திரம், திருக் குறள், ஞானக்குறள் மூன்றும் வேத ஆகமங்களை ஒன்றாக இணைத்து மெய்ப்பொருள் உண்மைகளை விளக்குவன.

கலியுகம் பிறந்து 5101 ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆயினும் நாம் இன்னமும் பழமை விரும்பிகளாக பழைய யுகத்திற் குரிய நெறிகளையே பின்பற்றுகிறோம்.

காலத்திற்கு ஏற்ப எமது உலகியல் வாழ்க்கை முறைகளை தீவிரமாக மாற்றிக்கொண்ட நாம் ஆன்மீக வாழ்க்கை முறைகளில் மாற்றங்களைக் காணாது பழமையில் மூழ்கிக்கிடக்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3000 ஆண்டுகட்கு முன்பே இறைவன் எமக்குரிய வாழ்க்கை நெறியை வகுத்துத் தந்துவிட்டான். அதனை அறியாத அறிவிலிகளாக நாம் வாழ்கிறோம்.

எமக்குரிய வாழ்க்கை நெறியை எடுத்துரைக்க வந்த சித்தர்களை வெறும் பித்தர்களாக முத்திரையிட்டு ஒதுக்கிவிட்டோம். எமது ஈழத் திருநாட்டில் இந்த மெய்ப்பொருள் உண்மைகளை விளக்க எண்ணிறந்த சித்தர்கள் தோற்றியிருக்கிறார்கள். வாழ்ந்தும் இருக்கிறார்கள்.

அண்மைக் காலத்தில் வாழந்த சித்தர்கள் இருவர். கொழும்புத் துறையிலிருந்து தவமியற்றிய யோகர் சுவாமிகளும், கொம்பனித் தெருவில் வாழ்ந்து தவமியற்றிய கார்த்திகேசு சுவாமிகளுமாவர்.

இவர்கள் இருவரும் மெய்ப் பொருளைத் தம்முள் கண்டு தெளிந்த உயர்தவத்தோர். நாம் அவர்களைப் பயன்படுத்தத் தவறிவிட்டோம். அந்த மெய்ப்பொருள் உண்மையை விளக்கிவரும் இராமநாதன் என்னும் சான்றோன் இன்றும் தனது 87வது வயதில் திருமந்திர மெய்ப்பொருளை விளக்கி வருகிறார். அவரையாவது நாம் பயன்படுத்தத் தவறக்கூடாது.

மெய்ப்பொருள் உண்மையை விளக்குவது திருமந்திரம். மந்திரம் என்பது மனிதன் முத்திநிலை அடைய ஏதுவாக இருப்பது. மனம் என்ற ஒன்றை உடையவன் மனிதன்.

மனத்தின் உயர்விற்கு ஏற்ப அவன் உயர்கிறான். மனமானது புலன்வழிச் சென்று உலக வியவகாரத்து அழுந்துகிறது. அதன்வழி அது கருமத்தை ஈட்டுகிறது.

மனிதன் தன்னுடைய செய்கைக்கு உரிய பலனை அனுபவிக்கிறான். நல்ல செய்கைக்கு ஈடாக நன்மையையும், அமைதியையும், இன்பத்தையும் அடைகிறான். தீய செய்கைக்கு ஈடாக தீமையையும், அமைதி இன்மையையும், துன்பத்தையும் அடைகிறான்.

மனம் எதனை சார்ந்து நிற்கிறதோ மனிதனும் அதனைச் சார்ந்து அத்தன்மையை அடைகிறான். உயர்ந்த பொருளைச் சார்ந்து நிற்கையில் உயர்கிறான். தாழ்ந்த பொருளைச் சார்ந்து நிற்கையில் தாழ்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் எல்லா நன்மைகளையும், இன்பங்களையும், ஆற்றல்களையும் கொண்ட ஒரு தனி முதல்வனாக இருக்கிறான்.

மனிதன் இறைவனைச் சார்ந்து நின்று அவன் மயமாகிறான். மனிதனை இறைவனோடு இணைக்கும் பாலமாக, அவனை இறை நிலைக்கு உயர்த்தும் ஏணியாக அமைவது திருமந்திரம்.

திருமந்திரத்தை ஆகமம் என்றே திருமூலர் மொழிகிறார். இது சிவத்தை விளக்குவதால் சிவாகமம் எனப்பட்டது. சிவாகமம் தந்திரம், மந்திரம், உபதேசம் என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

தந்திரமாவது, கரும காண்டம், ஞான காண்டம், உபாசனா காண்டம் எனும் வேதத்தின் மூன்று பிரிவுகளில், கரும காண்டத்தில் மேற்கொள்ள வேண்டிய செயல் முறைகளை விளக்குவது.

மந்திரமாவது, உபாசனா காண்டத்தில் மனத்தை ஒடுக்கி இறைவனைத் தியானிக்கும் வழிவகைகளை விளக்குவது.

உபதேசமாவது, ஞானகாண்டத்தில் இறைவனின் தன்மை யினை அறிந்து இறைமயமாக இருக்கும் நிலையையும், அந்த நிலையை பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு உபதேசிக்கும் முறைகளையும் விளக்குவது.

இம் மூன்று பிரிவுகளுக்குமான மெய்ப்பொருளை விளக்கும் ஒரே நூலாக அமைவது திருமந்திரம்.

மனிதனை உலகியற் சிற்றின்ப, வாழ்வினின்றும் பேரின்ப ஞான வாழ்விற்கு வழிகாட்டுவது தூயநெறி.

மனதைப் புலன் வழிச் செல்லாது நல்வழிப்படுத்தி அறிவின்வழிச் செல்லச் செய்வதே ஒழுக்கம்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ்வார்.

என்று மரணமற்ற பெருவாழ்வு வாழ ஒழுக்க நெறியே இன்றி யமையாதது என்கிறார் திருவள்ளுவர்.

ஒழுக்கநெறியே இறைவன் திருவடி. இறைபதம் அடைய முதலில் வேண்டப் படுவது தூயநெறியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்
சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே. (1604)

என விளம்புகிறார் திருமூலர்.

சதுர்யுகங்களிலும் தோன்றிய ஞானிகளின் கருத்துக்களும், யோகிகளின் அனுபவங்களும், முத்தர்களின் இயல்புகளும், ஆன்மவாதிகளின் தத்துவங்களும், சித்தர்களின் மெய்ப்பொருட் தெளிவுகளும் திருமந்திரத்தினுள்அடங்கி உள்ளன. வேத ஆகமங் களின் விளக்கமாய் அமைந்திருப்பது திருமந்திரம்.

தொன்மையான சிவநெறியின் சித்தாந்தத்தை விரிவாக விளக்குவதும் திருமந்திரமே.

தமிழன் கண்ட அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு மெய்ப் பொருள்களில், வள்ளுவரின் திருக்குறள் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றை மட்டுமே பேசுகிறது. ஔவையின் ஞானக் குறளோ வீடுபேற்றை மட்டுமே சொல்கிறது. ஆனால் திருமந்திரமோ நான்கையும் கூறும் முழுமையான மெய்ப்பொருள் நூலாக, நான் மறையாக அமைந்துள்ளது.

மனிதனை சிவமயமாக்கி சகல உயிர்களையும் சிவமாகக் காணும் உயர் பண்பினை வளர்த்து, சாதி சமய வேறுபாடுகளை வேரறுத்து சகல மக்களிடமும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை பேணி வாழ வழிகாட்டுவது திருமந்திரம்.

பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரத்துடன், ஒன்பது தந்திரங் களை உள்ளடக்கி மொத்தம் பதினொரு பிரிவுகளை கொண்டது திருமந்திரம்.

பசு, பதியை ஒன்றும் தன்மையில் (பதி + ஒன்று) பதினொன்று பிரிவுகளாக திருமந்திரத்தை அமைத்து தந்துள்ளார் திருமூலர்.

- அடியார்க்கடியன்

கொழும்பு அருளொளி நிலையம்
31/21. டோசன வீதி, கொழும்பு 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அண்ணல் அறைந்த அறிவு"

(திருமந்திர விளக்கம்)

உலகில் அறிவாகவும், மெய்ப்பொருளாகவும், வேதப் பொருளாகவும் நிற்கும் பொருளெதுவோ, அதுவே எமக்குள் ஐந்தெழுத்துச் சக்கரத்தில் இயங்கும் பொருள். அப்பொருளால் படைக்கப்பட்ட மற்றப் பொருள்கள் எல்லாம் அழியும் தன்மையுள்ள சடப்பொருள்களாம். தன்னைத் தன்னால் தனக்குள் அறிவிக்கும் அறிவுப் பொருளை அறிந்து, தன்னை அறிவதே அறிவாகும். திருமூலர் திருமந்திரம் என்னும் ஆகமத்தை, அண்ணல் அருளால் அருளிச் செய்ததாகவும், அண்ணல் அறைந்த அறிவை அறியாவிட்டால், இவ்வாகமத்தை கற்றதில் பயன் ஏதும் கிடையாது. அது நீர்மேல் எழுத்துப் போல பிரயோசனம் அற்றுப் போகும் என்று பின்வரும் திருமந்திரத்தால் கூறுகின்றார்.

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. (64)

அண்ணல் அறையும் அறிவாவது ஆத்மா இயங்கி ஒலிக்கும் ஐந்தெழுத்து மந்திரமாகும். இவ்வெழுத்துகளை, அகரம், இகரம், உகரம், ஓங்காரம், மகரம் என்று திருமூலர் தமது திருமந்திரத்தில் கூறியிருக்கிறார். நந்தியின் சீடரான பதஞ்சலியும், இதனைத் தமது யோகசூத்திரத்தில், கூறியிருக்கிறார். இதையே இறைவனின் திருநாமமாக "சிவாயநம", "நமசிவாய" என்று எமது முன்னோர்கள் சொன்னார்கள்.

பேராயிர முடைய பெம்மான் பேர் ஒன்றில்
அருட்கடல் ஆடுக என்றானே.

உலகில் உள்ள அத்தனை கோடி மக்களும், தனிப் பொருள் ஆகிய இறைவனுக்கு பல்லாயிரம் பெயர்கள் கொடுத்து, வணங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாலும், அவன் ஆத்மா இயங்கும், ஐந்தெழுத்தில் ஓமெனும் முப் பதத்திலேயே இருக்கின்றான். எல்லாத் தத்துவ ஞானிகளும் இம் முப்பதத்தில் ஓடும் பிராணவாயுவைப் பற்றிநின்றே வீடு பெற் றார்கள். யேசுநாதர், புத்தபிரான், முகமது நபி, போன்ற எல்லா ஞானிகளும், யோகிகளும், ரிஷிகளும் தவமிருந்தே தங்களுக்குள் இயங்கிய மெய்ப்பொருளான உட்பொருளையே உணர்ந்தார்கள்.

எமதுடம்பில் இயங்கும் கருவில் மிதித்த கமலப்பாதமான அகர எழுத்திலிருந்து விரிந்த, ஐந்தெழுத்தில் ஓடும் உயிரையே சீவன், பிராணன், பிரணவப் பொருள், ஆத்மா என்று பலவாறாகக் கூறுவர். ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி ஆத்மாவை அறிந்துணர்வதே அறிவாகும். மற்ற அறிவெல்லாம் பேய் அறிவு என்பார் திருமூலர்.

தன்னை அறிவது அறிவாகும் அ∴தன்றி
பின்னை அறிவது பேய் அறிவாகும்.

இக்கருத்தையே வேத, உபநிடதங்களும், பகவத் கீதையும், திருமந்திரமும் இன்னும் பல மெய்ஞ்ஞான தத்துவ நூல்களும் கூறுகின்றன.

கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின். என்றும்

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. என்றும்

திருவள்ளுவர் கூறினார்.

கருவில் மிதித்த கமலப்பாதத்தையே திருவடி, சேவடி, இணையடி, திருப்பாதம், பூங்குழல் எனப் பலவாறாகத் திருமந்திரம் கூறுகின்றது. இப்பாதத்திலிருந்து எழுந்து, ஐந்தெழுத்தாய் விரிந்து, இயங்கும் பொருளே எமது உயிராய் நிற்கின்றது. உடம்பினுள் இப்பொருளின் ஓட்டமே ஓமெனும் இறை நாமமான, சிவாயநம வாக எம்மை உயிர்வாழச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் இயங்கும் இவ் ஐந்து எழுத்தையுமே நந்தியின் மற்றொரு சீடரான பதஞ்சலி தமது யோக சூத்திரம் என்னும் நூலில் பஞ்சாட்சரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வைந்து எழுத்தும் ஓடும் வழியே எம்மனத்தைப் பதித்து அவ்வழி செல்வதையே பிராணாயாமம், அறம், தவம் என்று கூறியிருப் பதைத் திருமந்திரம் விளக்குகின்றது.

ஆமே எழுத் தஞ்சுமாம் வழியே ஆக
போமே அது தானும் போம்வழியே போனால்
நாமே நினைத்தன செய்யலு மாகும்
பார்மேல் ஒருவர் பகையில்லை தானே.

கருவில் மிதித்த கமலப் பாதத்தை ஆண்பாலாகவும், அதில் இருந்து எழுந்த உயிரை, பெண்பாலாகவும் திருமந்திரம் விளக்கு கின்றது. இதுவே விந்துவில் இருந்து எழுந்த நாதம் என்றும், "சத்" இல் இருந்து எழுந்த "சத்தி" என்றும் அகரத்தில் எழுந்த உகரம் என்றும் சிவனில் இருந்து எழுந்த சக்தி என்றும் கூறப் பட்டுள்ளது.

இறைவனின் தாளாகிய திருவடியே ஒரு தாயின் கருப் பையில் விழுந்து, பத்துமாத காலத்துள் விரிந்து, உடலைப் படைத்து, உயிராய் நிற்கின்றது. இந்த உட்பொருளாகிய, உறுபொருட் தத்துவத்தை அறியும் அறிவே அறிவாகும்.

இதுவே திருமூலருக்கு "அண்ணல் அறைந்த அறிவு".

சி. இராமநாதன்

திருமூலர் சங்கம்.
கொழும்பு – 04.

* * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருமந்திரத்தில் நல்குரவு"

(திருமந்திர விளக்கம்.)

இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. வறுமை கூடாதது. ஆதலால் திரு நீக்கப்பட்டார் படுகின்ற இன்னல்களை எண்ணிப்பார்த்து நாம் திருந்த வேண்டியது கடமையாகும்.

"நிரப்பினுள் யாதும் கண்பாடரிது" என்பர் வள்ளுவர்.

"வடிவும் தனமும்" என்னும் கந்தரனுபூதிப் பாடல் "மிடி என்றொரு பாவி" என்று வறுமையைத் திட்டுகின்றது.

புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப் பட்டார்களும் அன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே. - 209

உடுத்திய ஆடை கிழிந்து போயிற்று. அடையப்பட்டவரும் அன்பிலரானார்.

புடைவை மானத்தைக் காக்க உடுக்கப்படுவது. இதுபோலப் பணமும் மானத்தைக் காக்க வல்லது.

ஆதலின் புடைவையை உவமை காட்டினார். பொருள் இருந் தால்தான் பலரும் வந்து சேர்வார்; அன்பு காட்டுவார். பொருள் அற்றால் அன்பு காட்டார்.

பொருள் இல்லாதவர் தருமம் செய்ய இயலாது. ஆதலின் கொடை இல்லை என்றார்.

கொண்டாட்டம் என்பது பண்டிகை, விழா முதலியன. பணம் இருந்தால் நிமிர்ந்து நேரே நடக்க இயலும். அஃது இன்றேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை குனிந்துதான் நடக்க வேண்டும். ஆகவே நடை இல்லை எனப்பட்டது.

பொதுவாக நாட்டில் நல்வாழ்க்கை நடைபெறுவதற்கு உடை, நடை, வீடு, அன்புடைச் சுற்றம், கொடுக்கல், வாங்கல், கொண்டாட்டம், செல்வாக்கு இவை வேண்டுவனவாம். இவ்வளவும் இல்லாத வாழ்வு உப்பில்லாக் கறி போன்று சப்பென்று இருப்ப தாகும்.

கற்குழி தூரக் கனகமும் தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே. - 211

தூர்க்க முடியாத குழி போல்வது வயிறு. ஒரு வேளை உணவோடு அது அமையாது.

"ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்" என்ற பாட்டினால் வயிற்றின் தொந்தரவுகள் அறியக்கூடும்.

இவ் வயிற்றை நிரப்பும் பொருட்டே "சேவித்தல்" முதலான ஊழியங்களைச் செய்து பொருள் தேடுவர் உலகர். அப்படி எவ்வளவு தேடினாலும், அவ்வயிற்றுக் குழி தூர்க்கப் படாததே!

அப்பசியை ஆற்றும் வழி ஒன்றுள்ளது. அது திருவடி ஞானம் அடைதலே. இந்த ஞானம் அடையப் பெற்றார்க்கு, அழுக்கற்றுப் போவதனால் பசி முதலான துயரங்கள் இலவாம்.

சிவஞானச் செல்வர்க்கு இறைவனே சோறும் தண்ணீரும் வாகனங்களும் பிறவும் நல்கி ஆதரித்தமை வரலாறுகளால் அறியலாகும். இதனால் கனகம் தேடுவதை விட்டு சிவஞானத்தை தேடுக என்கிறார் திருமூலர்.

வயிறும் ஒரு பள்ளமான இடம். ஆதலின் ஈண்டு குழி எனப்பட்டது. அதன் வன்மை கருதி அதனைக் கற்குழி என்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேளை உணவு கொடுத்து வயிற்றுக் குழியை நிரப்பியதும் மறுவேளை அவ் வயிறு குழியுடன்தான் காணப்படுகிறது.

ஆகவே வயிற்றுக் குழியை அடைக்க முயலுவதை விட மல மாயையாகிய குழியை அடைக்க முயல வேண்டும் என்று இதில் திருமூலர் வற்புறுத்துகிறார்.

அக்குழியை அடைக்கப் பொருள் வேண்டாம். அறிவே போதும் என்கிறார்.

அக்குழி தூர்க்கும் அறிவாவது, இறைவன் திருவடிக் கண்ணே ஒன்றி இருக்கும் திருவடி ஞானம்.

அத்திருவடி ஞானம் பெற்றோர்க்கு பசி, பிணி, முதலியன இல்லை.

எப்படிப்பட்டவர்க்கும் அருட் துணையின்றி அக் குழியை தூர்க்க இயலாது. அக் குழியினை தூர்க்கும் அறிவாகிய திருவடி யுணர்வை உணர்ந்தபின் மல மாயைகள் மங்கலாகி அழுக்கறும். இழுக்கறவே அக்குழி தானே தூரும்.

திரு. சம்பந்தம்

(நன்றி : திருமூலரின் திருமந்திர விருந்து)

* * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் திருமூலர்

இந்த உலகத்தில் ஆண்டவனின் கருணை நீக்கமற நிறைந்து இருக்கின்றது. இறைவனின் கருணை இல்லாத இடமென்று எதுவுமின்றி எங்கும் பரந்து விரிந்திருக்கின்றது. அக் கருணையைப் பெற வேண்டு மெனில் நல்ல குரு மூலமாகத்தான் பெறவேண்டும்.

120 டிகிரி கடுமையான வெயில் இருப்பினும் அதில் காய்ந்து கொள்ளும் துணிசுடுமே தவிர எரிந்து போய் விடாது. ஆனால் அதே துணியில் சூரியகாந்தக் கண்ணாடி மூலம் அதே அளவு வெயிலைச் செலுத்தினால் துணி எரிந்துவிடுகின்றது. துணியை எரித்து விடும் நேரடி ஆற்றல் சூரிய வெட்பத்துக்கில்லை. சூரிய காந்தக் கண்ணாடி மூலம் ஐம்பத்து ஆறாயிரம் கிரணங்கள் ஒன்று சேர்ந்து வருகின்றபோதே துணி எரிகின்றது.

இறைவனைக் குறித்துச் செய்யும் பக்தியும் நேராக வரும் வெயில் போன்றதே. காய முடியுமே தவிர எரிக்க முடிவதில்லை. குருபக்தியோ சூரிய காந்தக் கண்ணாடி மூலம் வருகின்ற வெயில் மாதிரி ஒன்று கூடி வந்து நம் உள்ளத்தே உறைகின்றது. நமது மாமிச இச்சைகள் - ஆசைகள் அதனால் எரிக்கப்படுகின்றன. இந்த நிலைதான் சிவபக்தியைக் காட்டிலும் குருபக்தி சிறந்தது. என்ற தெளிவை நம்மிடையே ஏற்படுத்தியது.

கண்ணீரைத் தான் விட்டு உள் அசுத்தம் போக்கி
காரண சற்குருவினால் கசட்டைப் போக்கி
வெண்ணீரால் ஆதித் திருவேதாந்தத்தின்
வீடேக வேணுமென்றால் விரும்பிக் கேளு
தண்ணீரை உருவேற்றித் தியானம் செய்து
சச்சிதானந்தனையே சரணம் செய்து
கண்ணீரை விட்டழுது கசட்டைப் போக்கி
கரைஏற வேணும்இதைக் கைக்கொள்வீரே”

(அகத்தியர் ஞானம் - 30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எமக்கு இறைவனைக் காட்ட - தேர்ந்து கொள்ள- குருபார்வை தேவையாக உள்ளது. சரியான வழிகாட்டல் இன்றேல் தாளம் தப்பிய சங்கீதமாகிவிடும்.

நம்மிடையே நீண்ட நாள் மயக்கமொன்றுள்ளது. சைவம் எது என்பதைத் தெரிந்து கொள்ளாததுதான் அது. திருமூலர் பற்றிய தெளிவு இல்லாமல் தமிழனின் பக்திவழிபாடு இதுதான் என்பது - சைவ சித்தாந்தக் கருவின் வளர்ச்சியையே கெடுத்து விடும். இதை இன்று நன்கு உணர்ந்தவர்களில் மேலானவர் இராமநாதன் ஐயா அவாகள்.

"நீற்றைப் புனைந்தென்ன நீராடிப் போயென்ன - நீ மனமே
மாற்றிப்பிறக்க வழியறிந்தாயில்லை - மாமறை நூல்
ஏற்றுக் கிடக்கும் எழுகோடி மந்திரம் என்னகண்டாய்.
ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றையே"

என்று இடித்துக்கூறுபவர் பட்டினத்தடிகள். வேடத்தில் ஏமாற்று கிறவர்கள் இருக்கின்றார்கள். சைவப்புரவலர்கள் என்றும் அறிஞர்கள் என்றும் காட்டிக் கொள்பவர்கள் உள்ள இன்றைய உலகில் ஐயா ஒரு திருமூலர். அலட்டிக்கொள்ளாமல் என் கடன் பணி செய்து கிடப்பதே என்று வாழ்கின்றார். ஆடம்பரமில்லை அலட்டல்கள் இல்லை, வேடம் புனையும் வித்தைகள் இல்லை, மழித்தல் இல்லை, நீட்டலுமில்லை சாதாரண மனிதனாய் யோகர் சுவாமிகள் போல் திருமூலரைப் போல் நம்மிடையே வாழ்கிறார். அறிஞர்கள் அறியாத திருமந்திரத்தை அன்னார் அன்பர்களிடம் வழங்கிவருகின்றார். ஆன்மீகத்தின் ஆணிவேராக நம் குருபீடத்தில் வீற்றிருக்கின்றார். அவர் காலத்தில் வாழ்கின்றோம் என்பதும் அவரின் வழிகாட்டலில் நடக்கிறோம் என்பதும் புளகாங்கிதத்தோடு நினைத்துப்பார்க்கும் பேறாகின்றது.

ஆங்கிலத்தில் துறைபோய் நின்று - அமிழ்தத் தமிழில் சிந்தனைகளை வழங்குவதென்பது அரியதான புத்திக் கூர்மையைக் காட்டுகின்றது. சைவசித்தாந்தத்தின் விளக்கமாய் - திருமூலரின் உருவமாய் நம்மிடையே அவர் வாழ்கிறார். எண்பத்தேழு ஆண்டு இவ்வுலக வாழ்வு அவர் உடலைத்தான் தளர்த்திற்று - உள்ளத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. அது தழைத்துக் கொண்டே திருமூலர் திருமந்திரத்தின் ஒவ்வொரு இடுக்குகளிலும் படர்ந்து செல்கின்றது. ஐயாவின் வாழ்வு ஒரு தெய்வீக வாழ்வு. அன்பர்கட்குத் திகட்டாத வாழ்வு. மதவாதிகள் இவர் வழியை வந்து பார்க்கவேண்டும். இளைஞர்கள் இவரது பாதையைத் தேர்ந்து கொள்ளவேண்டும்.

இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இன்னொரு திருமூலருடன் நாம் உறவாடுவோம். ஐயாவின் பெருவாழ்வுக்கு இறைவனைப் போற்றுவோம்.

திருமூலர் வாக்கும் சிவயோகர் வாக்கும்
இருநூலாயினும் ஒரு வாக்கென்ற
பெருமையை விளக்கும் பேறு பெற்றுய்ந்த
பெருமகன் இராமநாதன் புகழ் என்றும் பொலிக.

என்று திருமதி. கல்யாணசுந்தரம் அவர்களைப் போல நாமும் கைகூப்பி வாழ்த்துகிறோம்.

-முல்லை-

* * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதியை காட்டும் திருமந்திர தாஸர்

திருமந்திரமே சிவகதிக்கு வித்தாகும்
திருமந்திரமே சிவமாம் - அருமந்த
புந்திக்குளே நினைந்து போற்றுமடி யார்தமக்கு
சந்திக்கும் தற்பரமே தான்.

வாழ்வில் வெற்றி கண்டு, நிறைவான வாழ்வு வாழத் துணை நிற்பது ஆத்ம சிந்தனை. இதனை மக்கள் குலத்திற்கு தந்தவர்கள் பலர். இந்த ஆத்ம சிந்தனைகளால் பற்பல சமயங்கள் உருவாகி உள்ளன. கௌதமரின் சிந்தனையால் பௌத்தமும், மஹாவீரரின் சிந்தனையால் சமணமும், கிறீஸ்த்துவின் சிந்னையால் கிறீஸ்த் தவமும், முகமது நபியின் சிந்தனையால் இஸ்லாமும் தோன்றின. எத்தனை மதங்கள் தோன்றினாலும், எத்தனை சிந்தனைளாள்கள் தோன்றினாலும் யாவரும் தெளிந்தது ஒன்றையே. அந்த ஒன்றே சகல உயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஆத்மா.

ஆத்மா தன்னையும் தன்தலைவனாம் பராத்மாவாவையும் அறிந்து ஒளிமயமாகப் பிரகாசிக்க வழிகாட்டுவது சமயம். சமய விழுமியங்களையும், மார்க்கங்களையும், வகுத்துக் கொடுப்பவை வேதம் அல்லது மறை நூல்கள். மனிதன் பிறவிப் பயனை எய்தத் துணையாக இருப்பதால் இவை மிகவும் புனிதமானவையாகப் போற்றப் படுகின்றன. கிறீஸ்த்தவர்கள் விவிலிய நூலை தமது உயிரினும் மேலாகப் போற்றுவார்கள். இஸ்லாமியரும் குர்ஆ்.னை மிகவும் புனிதமானதாக பேணுவர். பௌத்தர் திரிபீடகம் எனும் முப்பரிமாண நூலைப் போற்றுவர். ஆனால் இந்துக்களாகிய நாம் வேத ஆகமங்களாகிய எம்முதல் நூல்களை அறியாதவர்களாகவே இருக்கிறோம். தமிழில் எழுந்த முதல் சிவாகமம் திருமந்திரமே.

அனாதியான சனாதன தர்மத்தை எமது சமய நெறியாகக் கொண்டுவாழும் நாம், உலகில் இன்று பயிலப்படும் சமயத் தவருடன் ஒப்பு நோக்குகையில் மிகவும் பின் தங்கி இருப்பதை உணரலாம். இதற்குக் காரணம் என்ன என்று ஆராயின் நம் மிடையே வளர்ந்து விட்ட மூடநம்பிக்கைகளும், மெய்ப்பொருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய அறியாமையும், அதனை அறிய ஆர்வமின்மையுமே ஆகும். என்று நாம் இந்தக் கட்டறுத்து ஒளிஉலகில் பிரவேசிக்கிறோமோ அன்றுதான் வாழ்வில் வெற்றிகண்டு நிறைவாழ்வு காணமுடியும்.

அதற்கு முதற்படியாக ஒவ்வொரு இந்துவும் எமது வேத ஆகமச் சாரமாக அமைந்துள்ள திருமந்திரத்தை தமது இல்லங் களில் வாங்கி வைத்து உயிரினும் மேலாகப் போற்றிக்காக்க வேண்டும். காக்கும் திருமந்திரத்தை காட்சிப்பொருளாக வைக்காது கற்றுப் பொருளுணர்ந்து அது காட்டும் வழியில் நடக்கவேண்டும். அப்படிச் செய்வோமானால் சுபீட்சமான ஒரு எதிர்காலம் நம்மை நாடி வரும் என்பது திண்ணம்.

திருமந்திரம் நிறை மொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த மறை மொழியாகும். அஃது இலைமறை காய்போன்று, அரிதில் காணும் அரும் பொருளைத் தன்னகத்தே கொண்ட சக்தி வாய்ந்த தாகும். வெளிமுகமாகச் செல்லும் ஆன்மாவை உள்முகமாக செலுத்தி அங்கு இன்ப ஊற்றைக் காணச் செய்வது திருமூலரின் உபதேசமாகும்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.

என்கிறார் திருமூலர்.

திருமூல தேவனை சிந்தை செய்வார்க்கு
கருமூலம் இல்லையே காண்.

என்ற வாக்கிற்கொப்ப மூலனையே சிந்தை செய்து தமது வாழ்வை அவன் புகழ் பாடவும், அவன் அறைந்த அறிவரிதான மெய்ப் பொருள்களை விளக்கி, மக்களின் அறியாமையிருளை அகற்றும் பகலவனாக வெள்ளவத்தையில், முருகன் இடத்தில் (பிளேஸ்) 10ம் இலக்க இல்லத்தில் குடிகொண்டு விளங்குகிறார் பேரருளாளர் ஆகிய சின்னையா இராமநாதன் அவர்கள். இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தமது எண்பத்தேழாவது வயதில் முதுமை அடைந்த காயத்துடனும் இளமை குன்றாத இதயத்துடனும் வாழ்ந்து திருமந்திரத்துக்கு ஆழ்ந்த பொருள் கூறுகிறார்.

தமிழகத்து தமிழ் அறிஞர் பலர் தமது பாண்டித்தியங்கள், புலமைகள் யாவும் இவரது திருமந்திர விளக்கத்துக்கு இணை நிற்க முடியாமையை அறிந்து வியந்து பாராட்டியுள்ளார்கள். பாராட்டுகளுக்கும் புகழுரைகளுக்கும் மயங்காத ஞானத் தெளிவு இவருக்கு பிறப்பிலேயே அமைந்த ஒன்று.

தமது கல்வியை ஆங்கிலத்திலே கற்று, ஆங்கிலத்திலேயே கடமையாற்றி, வெளிநாட்டு சேவையில் இலங்கைப் பிரதிநிதியாக பணிபுரிந்தவருக்கு, தமிழில் பாண்டித்தியம் இல்லாத ஒருவருக்கு திருமந்திரத்தின் உட்பொருள் தெளிவாக புலப்படுகிறது என்றால் அவர் கருவில் திருவுடையவர் என்பதில் ஐயமில்லை. அவர் ஈழத்திருநாட்டில் மெய்ப்பொருள் உண்மையை விளக்க வருவிக்கப் பட்டவர் என்பது உறுதி. இவர்,

சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டு நீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்த அப்பார்வை பசுமரத்தாணி போல்
ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே.

என்ற திருமந்திரத்து எடுத்துக்காட்டாக வாழ்ந்து மற்றவர் களையும், சாத்திரங்களை கற்று, பலரும் போற்ற உபன்யாசம் செய்வதை விடுத்து, ஒரு கணப் பொழுதாவது புறத்தே ஓடித் திரியும் அறிவை, அகமுகமாகச் செலுத்தி புலன்வழிப் புறத்தே செல்லாது மறித்து, ஆத்ம நாதனை பார்த்துவிட்டால், அக்கணம் முதல் அந்த அற்புதமான காட்சியானது பசுமரத்தாணி போல இதயத்தில் பதிந்து விடும். உள்ளத்தில் அக்காட்சி பதிந்து விட்டால் எம்மைப் பிடித்த பிறவியானது கட்டுகள் அறுந்துவிடும். திருவருள் உறவாடும். பேரின்பப் பேறடையலாம் என்று விளக்கி எம்மையும் விளங்கவைக்கிறார். அவரையண்டி அருள்பெறக் கூடிவாரும் ஜகத்தீரே என்று அனைவரையும் அழைக்கிறோம்.

ஆ. அரசரத்தினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதன் தாள் வாழ்க!

சிவனே குருநாதனாக வந்து நந்திக்கு மெய்ப்பொருள் உண்மையை விளக்கினான். நந்தி குருவடிவாக வந்து மூலருக்கு அதனை ஓதினார். அதனால் மூலர் தனது பிறவி மலம் அறுக்கப் பட்டார். மலம் அறுக்கப்பட்டதால் மெய்ஞ்ஞானத் தெளிவு ஏற் பட்டது. அதனால் மூலன் தானும் நிர்மலன் ஆகினார்.

வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே!

திருமந்திரத்தை நிறைவு செய்யும் போது மூலர் இதனை குரு வாழ்த்தாக பாடுகிறார். என் சிவ குருநாதனாகிய நந்தியின் திருவடி வாழ்க! என் பிறவிக்குக் காரணமான மலத்தை நீக்கியவனுடைய திருவடி வாழ்க!! மலத்தை அறுத்ததன் மூலம் எனக்கு மெய்ப் பொருளை உணர்த்தியவனுடைய திருத்தாள் வாழ்க !!! மெய்ப்பொருளை உணர்த்தியதன் மூலம் எனது சித்த மலத்தை நீக்கி நிர்மலனாக்கியவனின் திருப்பாதங்கள் வாழ்க!!!!

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட நாதன் தாள் வாழ்க! நமச்சிவாய வாழ்க!!" என்கிறார் மணிவாசகர்.

தனது குருவை நினைவு கூர்ந்து வாழ்த்திய மூலர் வழியில் நாமும் எமக்குச் சிவ குருநாதனாக வந்து அமைந்த, இராம நாதன் தன் தாள் வாழ்க என வந்தித்து இச்சிற்றேட்டை நிறைவு செய்வோம்.

ஆழிசூழ் உலகமெலாம் அமைதி மேவ; ஆகாத பகை ஒழிந்து அன்பு உண்டாக; ஆராத கவலை பிணி அகன்று போக: ஆக்கம் ஒடு மக்கள் குலம் அழகாய் வாழ; ஆண்டவனை வேண்டுதல் செய்து அருளை நாடி; ஆனந்தத் தவநிலையை அணுகுவோமே.

- அடியார்க்கடியன்

COLOURDOTS - 31/21, DAWSON STREET, COLOMBO - 2. - TEL.:331439

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org